**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# The Jnanendriyas (Sense Organs) according to Saiva Siddhanta

**N. Saravanan B.Lit., B.Ed., M.A., M.Phil., PGDCA., (Ph.D.)***

*Assistant Professor, Department of Tamil, Science and Humanities, Jeppiaar Engineering College, Semmancheri, Chennai – 119.*

*Correspondence: saravananprof89@gmail.com,

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Gnanendriya is a tool for taking extraterrestrial information into knowledge. Vivekananda says that Gnanendriyas should serve the soul. The real freedom of the soul is to understand the senses. Saivasiddhantas and Thirumpas explain the idea that life can be made better by perfecting the Gnanendriyas for theology without going through the path of the Gnanendriyas. It is the soul that directs the senses. It is the Lord who directs the soul. Therefore, if the senses in ignorance there will be no sweetness in life, and the cycle of birth will continue as sins. Gnanendriyas arise from the sattvic ego. Sattvic egoism causes the mind to be calm and the senses to be directed. Sattvic Ego alone prepares one to surrender the 'yan' to the lord. According to Saivite philosophy Gnanendriyas do not arise directly from the body. They arise from Sattvic Ego.

**Keywords:** Gnanendriya, senses, soul, theology, ego.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# சைவசித்தாந்தங்கள் கூறும் ஞானேந்திரியங்கள்

**ந.சரவணன் B.Lit.,B.ED.,MA.,M.Phil.,PGDCA.,(Ph.D),**

உதவிப் பேராசிரியர், அறிவியல் மற்றும் மனிதநேயம், தமிழ்த்துறை,

ஜேப்பியார் பொறியியல் கல்லூரி, செம்மஞ்சேரி, சென்னை – 119

**ஆய்வுச்சுருக்கம்:**

ஞானேந்திரியம் என்பது புறஉலகு தகவல்களை அறிவிற்கு எடுத்துக் செல்லும் கருவியாகும். ஞானேந்திரியங்கள் ஆன்மாவிற்கு சேவை செய்யவேண்டும் என்று விவேகானந்தர் கூறுகின்றார். ஆன்மாவின் உண்மையான சுதந்திரமே புலன்களைப் புரிந்துகொள்வதாகும். ஞானேந்திரியங்களின் வழி செல்லாமல் ஞானேந்திரியங்களை இறைசிந்தனைக்கு முழுமையாக்குவதன் மூலம் வாழ்வை சிறப்பாக்க இயலும் என்ற கருத்தை சைவசித்தாந்தங்களும் திருமுறைகளும் விளக்குகின்றன. ஞானேந்திரியங்களை இயக்குவது ஆன்மா அந்த ஆன்மாவை இயக்குவது இறைவன் ஆகையால் இடைப்பட்டு அறியாமையில் ஞானேந்திரியங்களினால் புலன்களின் வழி சென்றால் வாழ்வில் இனிமை இருக்காது பாவபுண்ணியங்கள் என்று பிறப்பின் சுழல் இருந்துகொண்டே இருக்கும். சாத்துவிக அகங்காரத்திலிருந்தே ஞானேந்திரியங்கள் தோன்றுகின்றன. சாத்துவிக அகங்காரமானது மனம் அமைதியாகவும், புலன்கள் நல்வழியில் செல்லவும் காரணமாக அமைகிறது. சாத்துவிக அகங்காரம் ஒன்றே ஒருவனை 'யான் எனும் முனைப்பை" இறைவனிடம் சமர்ப்பிக்கத் தயார் செய்யும். என்பதன் மூலம் சைவ சித்தாந்தத்தின்படி, ஞானேந்திரியங்கள் நேரடியாக உடலில் இருந்து தோன்றுவதில்லை. அவை சாத்துவிக அகங்காரத்திலிருந்தே தோன்றுகின்றன என்பதை அறியமுடிகிறது.

**தரவுச்சொற்கள்:** ஞானேந்திரியம், புலன்கள், ஆன்மா, இறைசிந்தனை, அகங்காரம்.

**முன்னுரை:**

தாமசம், ராஜசம், சாத்வீகம் போன்ற குணங்களில் சாத்வீக குணமான கருணை உள்ளமானது ஆன்மாவைப் புனிதப்படுத்தும். அத்தகைய சிறப்பான குணங்களுக்குரிய புலன்களாகிய ஞானேந்திரியங்கள் பஞ்சபூதங்களாலும் சூழப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் ஆசைகளை நிரல்படுத்தி வாழும் செயலானது இறையை உணரச் செய்யும். ஞானேந்திரியங்களே ஞானம் பெறுவதற்கான வழியமைக்கும் இத்தகைய சிறப்புடைய ஞானேந்திரியங்களைப் பற்றிக் கூறும் விதமாக இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

**ஞானேந்திரியம் விளக்கம்:**

ஞானேந்திரியம் என்பது இந்தியத் தத்துவவியலில், குறிப்பாக சாங்கிய யோக முறையில், அறிவு அல்லது உணர்வைப் பெறும் புலன்களைக் குறிக்கிறது. 'ஞானம்' என்றால் அறிவு, 'இந்திரியம்' என்றால் கருவி. அதாவது, புற உலகிலிருந்து தகவல்களைப் பெற்று நம் அறிவிற்கு (மனதிற்கு)

கொண்டு செல்லும் ஐந்து உணர்வு உறுப்புகளை இவை குறிக்கின்றன. இவை மெய் – தொடுதல், வாய் – சுவை, கண் – பார்த்தல், மூக்கு – நுகர்தல், செவி – கேட்டல் போன்றவைகளாகும்.

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார்” – குறள் 6

மெய், வாய், கண், மூக்கு செவியென்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தினால் நிகழ்வதை நெறிப்படுத்தி உண்மையாக வாழ்பவர்கள் நீண்டநாள் வாழ்வதோடு முக்திநிலையும் அடைவர் என்பது உறுதி என்கிறார் திருவள்ளுவர்.

**ஞானேந்திரியங்கள் அறிவின் வாயில்கள்:**

ஞானேந்திரியங்கள் பற்றி விவேகானந்தர் கூறுகையில், புற உலகம் தரும் தூண்டுதல்களுக்கு எதிர்வினை ஆற்றுவதிலேயே மனித வாழ்வு கழிகிறது. எந்த ஒரு மனிதன் தனது இந்திரியங்களை (புலன்களை) தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறானோ, அவனே உண்மையாகப் புலன்களை வென்றவனாவான் என்கிறார் மேலும் அவர் ஞானேந்திரியங்களை அறிவின் வாயில்கள் என்று கூறினாலும் அவை ஆன்மாவிற்கு சேவை செய்யவேண்டுமே தவிர ஆன்மா அவற்றிற்கு சேவை செய்யக்கூடாது என்கிறார். அதுபோலவே மறைமலையடிகளும் ஞானேந்திரியங்களை ஆன்மாவின் ஜன்னல்கள் என்று கூறுவதோடு அவைகள் வெளிச்சம் தரும் ஜன்னல்களாகவே இருக்கவேண்டுமே தவிர முழு வெளிச்சத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்க இயலாது என்கிறார்.

**புலன்களிலிருந்து விடுபடுதலே சுதந்திரம்:**

ஆன்மாவின் உண்மையான சுதந்திரத்தை அடைவதற்கு புலன்களின் இயலபைப் புரிந்துகொள்வது அவசியம். ஆன்மா என்பது இயல்பிலேயே சுதந்திரமானது எதனாலும் கட்டுப்படுத்த இயலாது. புலன்கள் செயல்படும்போது ஆன்மா அவற்றில் கலப்பதில்லை ஆனால், அறியாமையினால் ஆன்மா தன்னை இந்த புலன்களோடும் உடலோடும் அடையாளப்படுத்திக் கொள்கிறது. இதுவே பந்தம் அல்லது அடிமைத்தனம் எனப்படுகிறது என்பதை சித்தாந்த நூல்களின் வழி அறியலாகிறது. ஆன்மாவின் சுதந்திரம் என்பது புலன்களை அழிப்பதல்ல, மாறாக அவற்றைச் சரியாகக் கையாளுவதாகும். இதனையே **"புலன்களின் வழியாகப் பெறும் இன்பம் தற்காலிகமானது மற்றும் அடிமைத்தனமானது. புலன்களைக் கடந்து நிற்பதே உண்மையான சுதந்திரம்."- சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் தொகுதி-2 ப 14** என்று விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

**புலன்கள் வழி ஞானம் பெறுதல்:**

**“ஞானேந்திரியங்கள் மூலமாக நாம் உலகைப் பார்க்கிறோம். ஆனால், அந்தப் புலன்கள் வழியாகப் பார்க்கும் அழகிலும், அறிவிலும் இறைவனைக் காணப் பழக வேண்டும். புலன்களை அடக்குவது என்பது அவற்றை அழிப்பதல்ல, மாறாக அவற்றை நல்வழியில் (இறைச்**

**சிந்தனையில்) செலுத்துவதுதான்”** சித்தாந்த ஞானபோதம் ப 92 உண்மையான புலன் அடக்கம் என்று மறைமலையடிகள் கூறுகின்றார்.

“இந்திரிய வயமயங்கி, இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய், அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தை தனைத் தெளிவித்துச், சிவமாக்கி, எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே!”

-திருவாசகம் பா.எண் 475

ஐம்புலன்களின் வசப்பட்டு அறிவிழந்து மாண்டுபோவதற்கே காரணமாகி விண்வெளியில் திரிந்து சென்று கொடிய நரகத்தில் விழுபவனாகிய எனக்கு மனத்தை ஏகாக்கிரமாகச் சிவமயமாக்கி, என்னை ஆட்கொண்ட எல்லையில்லாத பேரின்பமூர்த்தியை எழிலார்ந்த தில்லைப் பதியில் தரிசித்தேன் என்பதன் மூலம் இந்திரியங்களின் மூலம் மனதை இறைசிந்தனையில் திருப்பினால் அளவிலா ஆனந்தம் பெறலாம் என்கிறார்.

ஞானேந்திரியங்களில் இறைவனைசிந்தித்தல்:

1. **கண்:** "கண்ணார் அமுதக் கடலே" கண்களால் இறைவனது திருவுருவை மட்டும் தரிசித்தல்.
2. **செவி:** "செவிக்கு இனிய செஞ்ஞாயிறு" - காதுகளால் சிவபுராணத்தையும், ஐந்தெழுத்து மந்திரத்தையும் அன்றி வேறொன்றையும் கேட்காதிருத்தல்.
3. **மூக்கு:** "மலரடி மணம்" - இறைவனின் திருவடிகளில் சாத்தப்பட்ட மலர்களின் மணத்தை நுகர்தல்.
4. **நா:** "நா நமச்சிவாய எனவே" - நாவால் எப்போதும் இறை நாமம் ஓதுதல்.
5. **மெய்:** "ஆமாறடி அடி நாயேற்கு..." - உடல் இறைப் பணியில் ஈடுபட்டு, சிலிர்ப்புற்று அழுதல்.

இவ்வாறு ஞானேந்திரியங்களால் ஏற்படும் மயக்கத்திலிருந்து விடுபடுவதற்கு இறைசிந்தனையை ஐம்புலன்களில் நிலைநிறுத்துதல் வேண்டும் என்பதை மணிவாசகப்பெருமான் திருவாசகத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

ஐம்புலன்களையும் இறைவனை நோக்கித் திருப்பி, "அவனருளாலே அவன் தாள் வணங்கி" நின்றால், அதே புலன்களைக் கொண்டு வீடுபேறு அடைய இயலும் என்பதை மாணிக்கவாசகர் பல இடங்களில் தெளிவுபடுத்துகிறார்.

இதனை கத உபநிடதம் கூறுகையில், “குதிரைகள் தறிகெட்டு ஓடினால், பயணி இலக்கை அடைய முடியாது ஆனால் புத்தி என்னும் தேரோட்டி மனதை சரியாகக் கட்டுப்படுத்தினால், புலன்கள் ஆன்மாவின் சுதந்திரத்திற்குத் தடையாக இல்லாமல் கருவியாகவே செயல்படும்” ப 104 என்கிறது. இதில் குதிரைகள் – புலன்கள், பயணி – ஆன்மா, புத்தி - தசுதந்திரம் – ஜீவன் முக்தி, இதே கருத்தை

**ஞானேந்திரியங்கள் தனித்தன்மை வாய்ந்தது:**

**"ஐம்பொறிகள் ஒன்றை ஒன்று அறியா;**

**அவை தம்மைத் தாமும் அறியா; ஆன்மாவும்**

**அவற்றை இறைவன் இன்றி அறியாது..."**

**- சிவஞானசித்தியார் பா.எண் 206**

ஐந்து ஞானேந்திரியங்களில் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது. கண்ணிற்குப் பார்க்கும் திறன் மட்டுமே உண்டு. காதுக்குக் கேட்கும் திறன் மட்டுமே உண்டு. அதுபோலவே ஒவ்வொரு இந்திரியத்திற்கும் ஒரு திறன் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளதால் அவைகள் தனிப்பட்டு செயல்படுகின்றன. ஒரு பொறி மற்றொரு பொறியின் வேலையைப் புரிந்து கொள்ளாது. வியப்பான விஷயம் என்னவென்றால், "நான் பார்க்கிறேன்" என்று கண்ணுக்கே தெரியாது. "நான் சுவைக்கிறேன்" என்று நாக்குக்குத் தெரியாது. அதாவது, இந்தப் பொறிகளுக்குத் தங்களைப் பற்றிய உணர்வு கிடையாது. அவை வெறும் ஜடக் கருவிகள். இந்தப் பொறிகள் காட்டும் செய்திகளைத் தொகுத்து அறிவது ஆன்மா. ஆனால், அந்த ஆன்மாவும் கூட சிவபெருமானின் திருவருள் (சக்தி) துணையின்றி இந்தப் பொறிகளை இயக்க முடியாது. என்று சைவசித்தாந்தங்கள் கூறுகின்றன.

**ஞானேந்திரியங்களின் பணி:**

வெளியில் உள்ள சத்தம் அல்லது ஒளி நம் உறுப்புகளை அடைகிறது. ஞானேந்திரியங்கள் அந்தத் தகவலை உள்வாங்கி மனதிற்கு அனுப்புகின்றன. மனம் அந்தத் தகவலைப் பகுத்தாய்ந்து ‘இது சந்தனம்’, இது இசை எனப் புரிந்து கொள்கிறது.

ஞானேந்திரியங்கள் தகவல்களைச் சேகரிக்கும் கருவிகள் மட்டுமே. இவற்றை இயக்கும் சூத்திரதாரியாக 'மனம்' கருதப்படுகிறது. இந்த ஐந்துடன் **கர்மேந்திரியங்கள்** (செயற்படும் உறுப்புகள் - கை, கால் போன்றவை) மற்றும் மனம் சேர்ந்து செயல்படுவதாகக் கூறப்படுகிறது.

**ஞானேந்திரியங்களை இயக்குவது ஆன்மா**

**"விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு**

**அளந்தளந்து அறியும் ஆணை ஆகலின்**

**அடக்கி அறிஆர் அத்துணை - அதன் போல் கண்ட**

**ஆன்மா காட்டக் கண்டிடின்"**

**-சிவஞானபோதம் ஐந்தாம் சூத்திரம், வெண்பா - 2**

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து ஞானேந்திரியங்களும் அறிவற்றவை (சடம்). அவை ஒவ்வொன்றும் தனக்குரிய விஷயத்தை மட்டுமே அறியும். உதாரணமாக, கண் பார்க்கும் ஆனால் கேட்காது; காது கேட்கும் ஆனால் பார்க்காது. இந்தப் பொறிகள் தானாக எதையும் அறிவதில்லை. இவற்றின் பின்னால் இருந்து **ஆன்மா** (உயிர்) இயக்கினால் மட்டுமே இவை செயல்படும். இந்தப் பொறிகள் உலகப் பொருட்களை ஒவ்வொன்றாக, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே அறியும் தன்மை கொண்டவை. ஆன்மா இந்தப் பொறிகளைக் கொண்டு உலகை அறிவது என்பது

இறைவனது திருவருள் அல்லது 'ஆணை' (சக்தி) மூலமே நடக்கிறது. காந்தம் இரும்பை இழுப்பது போல, இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருந்து ஆன்மாவையும் அதன் கருவிகளையும் இயக்குகிறான்

"இறைவா! இந்த ஐந்து பொறிகளும் தத்தமது புலன் இன்பங்களைத் தேடி காட்டில் அலைந்து மேயும் விலங்குகளைப் போல தறிகெட்டு ஓடுகின்றன. ஒரு மாடு எப்படிப் பசியெடுத்தால் புல்லைத் தேடி அலைகிறதோ, அதுபோல கண் அழகைத் தேடி மேய்கிறது. காது புகழ்ச்சியையும் இசையையும் தேடி மேய்கிறது. நாவு சுவையைத் தேடி மேய்கிறது. இந்த மேய்தல் அடங்காத வரை மனிதன் அமைதி அடைய முடியாது. 'நீயும்... புலன் அந்தம் ஆகப் புகுந்து நின்றாயே' என்கிறார். 'இந்த ஐந்து புலன்களும் எங்கே போய் முடிகிறதோ (**அந்தம்**), அங்கே நீ வந்து நிற்கிறாய்' புலன் ஐந்துக்குள்ளும் புகுந்து நின்ற இறைவன் இறுதியில் அது அலைந்து மனம் தெளிவாகும்போது இறைவன் இருப்பதை உணரமுடிகிறது. அதாவது உலக விஷயங்களில் மேய்ந்து கொண்டிருந்த புலன்களைத் தடுத்து, அவற்றை இறைவனது திருவடியில் நிலைநிறுத்தும்போது, அந்தப் புலன்களின் முடிவில் இறைவனைக் காண முடிகிறது. இறைவன், புலன்களுக்குள்ளேயே இருந்தும் ஆட்கொள்கிறான் என்பதை, **"என் கண்ணே! என் காதே! என் சுவையே! நீயே அந்த ஐந்து புலன்களாகவும் மாறி நின்று என்னை ஆட்கொண்டாய்." – திருவாசகம் என்கிறார். ஞானேந்திரியம் தோன்றியதை சித்தாந்த நூல்கள் குறிப்பிடுகையில்,** முக்குணங்களில் சாத்துவிக அகங்காரத்திலிருந்தே ஞானேந்திரியங்கள் தோன்றுகிறது என்கின்றன.

குணங்களின் அடிப்படையில் அகங்காரத்தை மூன்றாகப் பிரிக்கலாம்: அவைகள்

**தாமச அகங்காரம்:** சோம்பல், அறியாமை மற்றும் இருளைக் கொண்டது. 'நான் யாருக்கும் கீழ்ப்படிய மாட்டேன்' என்ற பிடிவாதம்.

**ராஜச அகங்காரம்:** அதிகாரம், வேட்கை மற்றும் செயலில் ஆர்வம் கொண்டது. 'நான் மற்றவர்களை விட உயர்ந்தவன், நான் இதைச் சாதித்தேன்' என்ற போட்டி மனப்பான்மை.

**சாத்துவிக அகங்காரம்:** அறிவு, கருணை மற்றும் தூய்மை நிறைந்தது. 'நான் இறைவனின் கருவி 'அல்லது 'நான் உலகிற்கு சேவை செய்பவன்' என்ற எண்ணம் கொண்டது என்று அகங்காரம் பற்றி சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

சிவஞான சித்தியாரில் அகங்காரத்தின் மூன்று நிலைகளைப் பற்றி (தைசதம், வைகாரிகம், பூதாதி) விளக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சாத்துவிக அகங்காரத்தைப் பற்றியும் அதன் விளைவாகத் தோன்றும் கருவிகளைப் பற்றியும் சிவஞான சித்தியார் குறிப்பிடுகையில்,

**"மனம்வசனம் ஆதிவய மாக்கிஆங் காரம்**
**தனதொரு வைகாரிகம் தைசதம் பூதாதி**
**என மூன்று விதமாகும் இதில்வைகா ரிகத்தில்**
**இனியமனம் புத்திமுத லானஇந்த்ரி யங்கள்**

**தனைஉதவும்..."**

**- சிவஞான சித்தியார் பாடல் (சுபக்கம் - 2.53)**

சிவஞான சித்தியாரின் படி, அகங்காரம் என்பது மூலப் பிரகிருதியிலிருந்து தோன்றும் ஒரு தத்துவம். இது மூன்று குணங்களின் அடிப்படையில் மூன்றாகப் பிரியும்:

1. **வைகாரிக அகங்காரம் (சாத்துவிகம்):** இது சாத்துவிக குணத்தின் வெளிப்பாடு. இதிலிருந்துதான் **மனம்** மற்றும் **ஞானேந்திரியங்கள்** (மெய், வாய், கண், மூக்கு, செவி) தோன்றுகின்றன.
2. **தைசத அகங்காரம் (ராஜசம்):** இது ராஜச குணத்தின் வெளிப்பாடு. இதிலிருந்து **கன்மேந்திரியங்கள்** (வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்) தோன்றுகின்றன.
3. **பூதாதி அகங்காரம் (தாமசம்):** இது தாமச குணத்தின் வெளிப்பாடு. இதிலிருந்து **தன்மாத்திரைகளும்** (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) அதன்பின் பஞ்ச பூதங்களும் தோன்றுகின்றன.

**சாத்துவிக அகங்காரத்தின் தனிச்சிறப்பு**:

சித்தியார் விளக்கத்தின்படி, சாத்துவிக அகங்காரம் என்பது ஒரு ஆன்மா தன்னை ஒரு செயலில் ஈடுபடுத்திக்கொள்ளும் போது ஏற்படும் **'நேர்மறையான முனைப்பு'** சாத்துவிக அகங்காரம் மேலோங்கும் போது, அறிவு (புத்தி) தெளிவாகச் செயல்படும். 'நான் புண்ணியம் செய்வேன், 'நான் இறைவனை அடைவேன்' என்ற முனைப்பு இதில் அடங்கும். மனம் அமைதியாகவும், புலன்கள் நல்வழியில் செல்லவும் இந்த அகங்காரமே காரணமாகிறது. மற்ற இரு அகங்காரங்களும் உலகப் பற்றில் உழல வைக்கும். ஆனால், சாத்துவிக அகங்காரம் ஒன்றே ஒருவனை 'யான் எனும் முனைப்பை" இறைவனிடம் சமர்ப்பிக்கத் தயார் செய்யும். என்பதன் மூலம் சைவ சித்தாந்தத்தின்படி, ஞானேந்திரியங்கள் நேரடியாக உடலில் இருந்து தோன்றுவதில்லை. அவை சாத்துவிக அகங்காரத்திலிருந்தே தோன்றுகின்றன என்பதை அறியமுடிகிறது.

சாத்துவிக அகங்காரத்திலிருந்து உருவாகும் கரணங்களே ஒரு மனிதனின் அறிவையும் செயலையும் தீர்மானிக்கின்றன. ஆன்மா நேரடியாக எதையும் அறிய முடியாது. அதற்கு கண்ணாடி போன்ற நான்கு உட்கருவிகள் தேவை. அவையே 'அந்தக்கரணங்கள்' என்பதாகும். அவைகள் **மனம் -** ஐயப்படுதல் ஒரு பொருளைப் பார்த்தவுடன் "இது அதுவோ? இதுவோ?" என எண்ணுவது. **புத்தி -** நிச்சயித்தல். 'இது இன்னதுதான்' என்று தீர்மானிப்பது. இதுவே ஆன்மாவிற்கு இன்ப துன்பங்களை நுகர்விப்பது. **அகங்காரம் -** முனைப்பு. 'இதை நான் அறிவேன்', 'இதை நான் செய்வேன்' என்ற எழுச்சி. **சித்தம் -** சிந்தித்தல். கடந்த கால நினைவுகளைத் தொகுத்து ஆராய்தல் போன்றவைகளாகும்.

**ஞானேந்திரியங்கள் மற்றும் கன்மேந்திரியங்கள்**:

ஞானேந்திரியங்கள் வெளி உலகத்திலிருந்து செய்திகளை உள்வாங்குகின்றன கர்மேந்திரியங்கள் அதற்கு எதிர்வினை ஆற்றுகின்றன. எடுத்துக்காட்டாக கண்(ஞானேந்திரியம்) ஒரு பழத்தைப் பார்க்கிறது. கைகளால் (கர்மேந்திரியம்) அதை எடுத்தல்.கன்மேந்திரியங்கள் எனப்படும்.

**மனதின் பங்கு**:

ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் ஆகிய இரண்டு வகை இந்திரியங்களையும் இணைக்கும் பாலமாக **மனம்** இருக்கிறது. மனதிற்கு அதிதேவதை சந்திரன். மனம் உத்தரவிட்டால் மட்டுமே இந்திரியங்கள் செயல்படும். ஞானேந்திரியங்கள் நம்மை அறிவு ரீதியாக உலகத்துடன் இணைக்கிறது. கர்மேந்திரியங்கள் நம்மை செயல் ரீதியாக உலகத்தோடு இணைக்கிறது. இவை இரண்டும் சரியாக இயங்கும்போதுதான் ஒரு மனிதன் முழுமையான வாழ்வை வாழ முடியும். கன்மேந்திரியங்களின் செயல்பாடுகளை (பேசுதல், நடத்தல், கொடுத்தல் போன்றவை) சிவனுக்கே ஆளாக்கும் மணிவாசப் பெருமான் திருவாசகத்தில்,

**"துத்திப்பொறி யிற்சுணங்கன் றோன்றப் பிறப்பொழித்துச்**
**சத்திப் பதிவிப்பச் சன்னெறிநேர் நின்றவா**
**பத்திப் படுப்பப் பரஞ்சோதி வந்தருளிப்**
**பித்தப் பணிவிப்பன் காணேடீ யம்பாணாய்."**

**- திருவாசகம் - திருத்தெள்ளேணம் (பாடல் 11)**

இறைவன் தன் திருவடியைப் பதித்து, அடியவனின் கன்மேந்திரியங்களை - அதாவது அவனது பணிகளை - தன் வசப்படுத்தி ஆட்கொள்கிறான் என்று கூறப்படுகின்றது.

**கன்மேந்திரியங்களை இறைப்பணியில் செலுத்துதல்**:

கன்மேந்திரியங்கள் ஐந்தும் (வாக்கு, பாணி, பாதம், பாயு, உபத்தம்) எவ்வாறு இறைவனுக்கு ஆட்பட வேண்டும் என்பதை **அப்பரடிகள் (திருநாவுக்கரசர்)** மிகத் தெளிவாக ஒரு பாடலில் விளக்கியுள்ளார். திருவாசகத்தின் கருத்தோடு இது மிக நெருக்கமான தொடர்புடையது:

**வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே –**

**-திருவங்கமாலை பதிகம் 4 (அப்பர் தேவாரம்):**

வாழ்த்துவதற்கு வாயையும், நினைப்பதற்கு மனதையும், வணங்குவதற்குத் தலையையும் தந்த இறைவனை, (கைகளால்) மலர் தூவித் துதிக்காமல் இவ்வளவு காலம் வீணே கழித்தேனே என்று திருநாவுக்கரசர் வருந்துகிறார்.

**முடிவுரை:**

ஞானேந்திரியங்கள் என்று சொல்லப்படுகின்ற கண், காது, மூக்கு, வாய்,மெய் போன்ற அனைத்தும் ஆசைகளின் வழி சென்று அறியாமையில் விழும். அவற்றை சரியாக நெறிப்படுத்து இறைவழியில் திருப்பி வாழ்வினை செம்மையாக்கினால் வாழும்போதே வாழ்வை மகிழ்ச்சியாக வாழ்வதுடன், இறுதியில் வீடுபேறு அடையலாம். அவைகள் போகும் வழியில் நாமும் சென்றால் வாழ்வு நெறிப்படுத்தப்படாமல் தறிகெட்டுப் போய்விடும் என்பதை ஞானேந்திரியங்களைப் பயன்படுத்துவதைப் பொறுத்தே வாழ்வு அமையும் என்பது புலப்படுகிறது.

**பார்வை நூல்கள்**


[1]. அருள் நந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார் (சுபக்கம்),

[2]. திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, மயிலாடுதுறை – 03, பதிப்பு - 1954

[3]. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், தொகுதி - 2, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் வெளியீடு பக்கம் 14 பதிப்பு -2013

[4]. சுவாமி சித்பவானந்தர், கடோபநிடதம், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, பதிப்பு - 2015

[5]. திருவள்ளுவர், திருக்குறள், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 60009, பதிப்பு – 2021

[6]. திருநாவுக்கரசர், அப்பர் தேவாரம், பன்னிருதிருமுறைகள் ஆய்வு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பதிப்பு – 1940

[7]. திவாய்மொழி, மொ.ஆ புருஷோத்தம நாயுடு, மெட்ராஸ் யனிவர்சிட்டி, பதிப்பு - 1955

[8]. மறைமலையடிகள், சித்தாந்த ஞானபோதம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பதிப்பு - 1998

[9]. மாணிக்கவாசகர், பத்மதேவன் (உ.ஆ), திருவாசகம், கற்பகம் புத்தகாலயம், சென்னை – 17, பதிப்பு - 2015

[10]. மெய்கண்டதேவர், சிவஞானபோதம், 5ஆம் சூத்திரம் திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு, பதிப்பு – 1952 Translate to English


References:


[1]. 1.**Arulnandi Shivachariyar**, *Sivajnana Siddhiyar (Supakkam)*, Thiruvaduthurai Adheenam Publication, Mayiladuthurai – 03, Edition – 1954.

[2]. 2. **Swami Vivekananda**, *Jnanadeepam*, Volume – 2, Sri Ramakrishna Math Publication, Page 14, Edition – 2013.

[3]. **Swami Chidbhavananda**, *Kathopanishad*, Sri Ramakrishna Tapovanam, Tirupparaithurai, Edition – 2015.

[4]. 4.**Thiruvalluvar**, *Thirukkural*, 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai – 600098, Edition – 2021.

**[5].** **Thirunavukkarasar**, *Appar Tevaram*, Twelve Tirumurai Research, Annamalai University, Edition – 1940.